**சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - 2022**

---

சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் (எஸ்ஏபிபி) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூன் 26 ஆந் திகதிய 2000001843 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2017 நவம்பர் 21 ஆந் திகதிய 2000001984 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2019 மே 16 ஆம் திகதிய 2000002639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் எஸ்ஏபிபி இற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. வணிகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் ஈடுபட்டுள்ள 57,000 சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவு தரத்தை நிலையாக அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் வணிக பங்குடமைக்கான அணுகல், கிராமிய நிதிக்கான அணுகல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை உரையாடல் ஆகிய மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,170 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 105.03 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,892 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 54.4 மில்லியன் தொகை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 8,278 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்தி செய்தல் திகதி 2025 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 527,094 தொகையான செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரியின் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் போது 2022 ஆம் ஆண்டு தொடர்பாக 2023 சனவரியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை நாங்கள் கருத்தில் கொண்டிருந்தோம். மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது கொடுப்பனவு விடுபட்டவொன்றாக உள்ள போதிலும் ஏனைய அனைத்து ஆலோசனைக் கொடுப்பனவுகளும் முறையாகக் கருத்தில்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், மேற்படி கொடுப்பனவுகள் பெப்ரவரியில் செலுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்கள் உண்மையான பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படுகின்றன. எனினும் வாகனமொன்றின் உண்மையான பெறுமதி ரூபா 17 மில்லியனாக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது வரலாற்று பெறுமதியில் ரூபா 42 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, நடைமுறையல்லாத சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா 25 மில்லியனால் அதிகரித்து மதிப்பிடப்பட்டுள்ளது. | மேற்படி ஜீப்பின் கொள்வனவு விலை ரூபா 41,973,311 ஆக இருந்ததுடன் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் 2021.11.28 இல் அதனை ரூபா 17,000,000 என மதிப்பிட்டுள்ளது. 2021 கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் SAPP ஆனது ரூபா 24,973,311 குறைக்கப்பட்ட பெறுமதியை பதிவழிப்பு செய்வதற்கு செயலாளர் - MoA இன் அங்கீகாரத்தை கோரியுள்ளது.<br><br>நி.பி. 108 இன் பிரகாரம் CAO இன் அங்கீகாரம் மற்றும் ஆலோசனையுடன் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த குறிப்பிட்ட சொத்து NADep செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு SAPP இற்கு மாற்றப்பட்டது. IFAD இன் பரிந்துரையின் அடிப்படையில், வரலாற்று பெறுமதி SAPP இன் புத்தகங்களுக்கு ”அரசாங்க வகை பங்களிப்பு” ஆக எடுத்துக் கொள்ளப்பட்டது, எனினும், சொத்து பெறுமதி குறைவடைவதை சீராக்குவதன் மூலம் அரசாங்க வகை பங்களிப்பின் பெறுமதி குறைவடைதலை ஏற்படுத்தும். | நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பேணப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 08 இல் கம்பனியொன்று சமர்ப்பித்த முன்மொழிவின் பிரகாரம், விவசாயிகளுக்கு தற்போதைய மற்றும் எதிர்வுகூறப்பட்ட நுண்காலநிலை நிலைமைகள், தெரிவுசெய்யப்பட்ட உகந்த இலாபகரமான பயிர்கள் போன்ற பல்வேறு தகவல்களை வழங்குவது இந்த முகாமைத்துவ தகவல் முறைமையில் (MIS) சிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த வசதிகள் இறுதி உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இறுதி உடன்படிக்கை மற்றும் முறைமையின் இறுதி வெளியீட்டின் பிரகாரம் இந்த MIS தகவல் சேகரிப்பு மற்றும் அறிக்கை உருவாக்கப்படும் நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படலாம், மேலும் இது முன்மொழியப்பட்டவாறு விவசாயிகளின் கைத்தொலைபேசிகளுக்கு எந்த தகவலையும் வழங்காது. | நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள SAPP இன் செயற்பாட்டு நோக்கெல்லையின் அடிப்படையில் TOR தயாரிக்கப்படுகிறது. பயனாளி முகாமைத்துவம், மானியம் வழங்குதல், கடன் வழங்கல் மற்றும் பயிற்சி முகாமைத்துவம் போன்ற SAPP இன் முக்கிய தொகுதிகளை உள்ளடக்குவதற்கு IFAD கோரியது. ஆனால் சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட முன்மொழிவில், அவர்கள் (தற்போதைய மற்றும் எதிர்வுகூறப்பட்ட நுண்காலநிலை நிலைமைகள், உகந்த இலாபகரமான பயிர்களைத் தெரிவுசெய்வது போன்றன) உட்பட பல தொகுதிகளை உள்ளடக்கியிருந்தனர், ஆனால் SAPP இந்த கட்டத்தில் அவை அனைத்தையும் அவசியமானதாக இனங்காணாததுடன் முக்கிய தொகுதிகளை மாத்திரமே TOR இல் உள்ளடக்கியது. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவ தகவல் முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ தகவல் முறைமை இரண்டு மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த உடன்படிக்கை சுமார் ஒரு வருடம் மற்றும் இரண்டு மாத காலத்திற்கு ஐந்து முறை நீடிக்கப்பட்டுள்ளது. | SAPP ஆனது களத்தில் இருந்து நேரடியாக சரிபார்க்கப்பட்ட தரவைச் சேகரிப்பதற்கு விரிவான MIS ஐ நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறதுடன் திட்டமிடப்பட்ட தலையீடுகளின் வெவ்வேறு நிலைகளில் முடிவுகளை எடுப்பதற்காக அந்த தரவுகளை செயன்முறைப்படுத்தி ஒழுங்கமைக்கிறது. 2022 சனவரியில் கனோபஸ் பிறைவேட் லிமிட்டட் மற்றும் SAPP இடையே எம்ஐஎஸ் ஐ வடிவமைத்தல், உருவாக்குதல் மற்றும் அமுல்ப்படுத்துதலிற்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஆனால் ஹொஸ்ரிங் சேர்வர் வழங்குநர் நாட்டில் நிலவிய இறக்குமதி கட்டுப்பாடுகள், கோரிக்கையை மாற்றுதல் வழங்கப்பட்டதன் காரணமாக செயன்முறை தாமதமாகியது, MIS இன் வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி சுறுசுறுப்பான முறையை பின்பற்றுகிறது | செயற்திட்டத் திட்டங்கள் சரியாகவும் வினைத்திறனாகவும் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆரம்பத்தில், SAPP இன் முக்கிய செயற்பாட்டு தொகுதிகளுடன் அபிவிருத்தி தொடங்கப்பட்டது. | |
| (இ) | உடன்படிக்கை திகதியிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பின்னர் MIS இற்கான சேர்வர் வசதி கொள்வனவு செய்யப்பட்டது. இதன் காரணமாக, முதல் இரண்டு மாத உடன்படிக்கை மேலும் 60 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டிருந்தது.<br>• சேர்வர் கொள்வனவு செய்த திகதி - 2022/04/07<br>• ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதி - 2022/01/03 | தேவைகள் சேகரிப்பு மற்றும் இறுதிப்படுத்தலின் ஆரம்ப கட்டம் திட்டமிட்டதை விட பல நாட்கள் எடுத்தது. SAPP இன் தகவல் ஓட்டத்தைப் புரிந்து கொள்வதற்கு சேவை வழங்குநர் பல கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தியின் அடிப்படையில் வணிக பகுப்பாய்வு பூர்த்தியடைந்த பின்னர் சேவை வழங்குநர் தொடக்க அறிக்கையை சமர்ப்பித்தார். இந்த செயன்முறை பூர்த்தியடைந்ததும், சேவை வழங்குநர் ஹொஸ்ரிங் சேர்வர் சேவையைக் கோரினார். சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட விவரக்குறிப்புகளின் அடிப்படையில் SAPP சேர்வரை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. | சேர்வர் வசதியை உரிய காலத்தில் எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்ததாரர் MIS ஐ 2023 மே 31 இல் பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கு இணங்கியிருந்தார் மேலும் MIS ஐ முதல் ஆறு மாதங்களுக்குள் இலவசமாகப் பராமரிப்பதற்கு மின்னஞ்சல் மூலம் இணங்கியிருந்தார். முறைமை பராமரிப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆரம்ப உடன்படிக்கையில் சேர்க்கப்படவில்லை. மேலும் எதிர்காலத்தில் சேவை வழங்குநரின் கோரிக்கையின் பிரகாரம் MIS ஐ பராமரிப்பதற்கு பெரும் விலையை செலுத்தும் அதிக அபாயம் இருக்கும். | எந்தவொரு MIS முறைமைக்கும் வெப் ஹொஸ்ற் (web host) வைத்திருப்பது தவிர்க்க முடியாததாகும். கனோபஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வெப் ஹொஸ்ரிங் பணி வழங்கப்பட்டுள்ள போதிலும், சேவை வழங்குநர் போட்டி செயன்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். | பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு வெளித் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்யும்போது கவனமாக இருக்க வேண்டும். |
| (உ) | பெறுமதி சங்கிலி சேகரிப்பாளர்களுக்கு (VCM) கணனிகளை வழங்கும் நோக்கத்துடன், பெறுகைக் குழு 2022 செப்தெம்பர் 23 இல் ஒரு கம்பனியிடமிருந்து 60 ரப்-கணனிகளை கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்து கொள்வனவுகளை மேற்கொண்டது. ரப் வழங்கும் பதிவேட்டை சரிபார்த்த போது இந்த கணனிகள் VCM இற்கு | தற்போது களப்பணிகளுக்கு 50 VCMs உள்ளனனர், மேலும் 10 மேலதிக VCMs இற்கான IFAD அங்கமுகாரம் பிராந்திய கடமைகளின் விரிவாக்கம் காரணமாக எதிர்பார்க்கப்பட்டது. அதன் பிரகாரம் வணிக அபிவிருத்திப் பிரிவின் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க, 60 ரப் கணகளங்களில் கடமைகளை மேற்கொள்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. எனவே, VCMs தவிர, தங்கள் கடமைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் களப் பணிகளில் ஈடுபடும் | செயற்திட்டத்தை நோக்கெல்லைக்கு வெளியே செயற்படுத்தக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரம் வழங்கப்படாதமை அவதானிக்கப்பட்டது. | SAPP PMU பதவியணியினருக்கும் ரப் கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 05 ரப் கணனிகள் வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன. | |

## 3.2 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட கித்துல் 4P (பொது-தனியார்-உற்பத்தியாளர் பங்குடமை) செயற்திட்டத்தை அமுல்ப்படுத்திய போது செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துகின்ற லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட்டிற்கு விவசாயிகளின் வங்கிக் கணக்குகள் மூலம் அரசாங்க பங்களிப்புகள் செலவு வைக்கப்பட்டிருந்தன. | விவசாயிகளின் வங்கிக் கணக்குகள் மூலம் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட்டிற்கு அரசாங்க பங்களிப்புக்கள் செலவு வைக்கப்பட்டுள்ளன. ஊக்குவிப்பாளர் தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி SAPP முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட முன்மொழிவு மற்றும் பணிப்புரைகளின் பிரகாரம் பொருட்களை கொள்வனவு செய்துள்ளார். மதிப்பாய்வு செய்யப்பட்ட பொருட்களை விவசாயிகளுக்கு விநியோகித்தவுடன், விவசாயிகளின் கணக்குகள் மூலம் அதன் விலை ஊக்குவிப்பாளரிற்கு மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்தது. மொத்தமாக கொள்வனவு செய்வதன் நன்மையைப் பெறுதல், நிபுணர்களின் அறிவுடன் தரமான பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குநர்கள் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர்களால் விளக்கமளித்து பயிற்சியளிப்பதை எளிதாக்குதல் போன்ற நோக்கத்துடன் 4Ps இற்கு நடைமுறைப்படுத்தப்படும் நடைமுறைகளில் இதுவும் ஒன்றாகும். | இதன் நலன்கள் விவசாயிகளுக்குச் செல்லும் வகையிலும், நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கத்திலேயே விவசாயிக்குத் தெரிவிக்கப்படும் வகையிலும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 404 விவசாயிகளுடன் தொடர்புடைய ரூபா 10 மில்லியன் தொகை லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட்டிற்கு கித்துல் துளி (Kitul trickle) உருகுவதற்கு அடுப்புகளை அமைப்பதற்காக வழங்கப்பட்ட போதிலும் மதிப்பீட்டின் பிரகாரம் கல்வனைஸ்ட் புகைக் குழாய், கம்பி வலை மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றிற்காக ரூபா 4 மில்லியன் (ஒரு விவசாயிக்கு ரூபா 14,800 படி) | மதிப்பீட்டின் பிரகாரம் கித்துல் துளியை உருக்கும் அடுப்புக்களை அமைப்பதற்காக ஒரு விவசாயிக்கு ரூபா 25,000 வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூபா 14,800 ஆனது கல்வனைஸ்ட் புகை குழாய், கம்பி வலை மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான கட்டணங்களை கொள்வனவு செய்வதற்காக காணப்பட்டதுடன் மணல், செங்கல், களிமண் மற்றும் சாம்பல் ஆகியவற்றுக்காக மிகுதி காணப்படுகிறது. ஆனால் விலை உயர்வால் மேற்படி மூன்று பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரமே மொத்தத் தொகை போதுமானதாக இருந்தது. எனவே, மணல், செங்கல், களிமண் | பொருட்களின் விலை உயர்ந்திருக்காததால், விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் விவசாயிக்கே திரும்ப வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்ததுடன் மீதமுள்ள ரூபா 6 மில்லியன் நிறுவனத்தால் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | மற்றும் சாம்பல் போன்ற ஏனைய பொருட்களின் கிரயத்தை விவசாயிகள் ஏற்க ஒப்புக்கொண்டனர். எனவே, ஊக்குவிப்பாளர் நிதியை தவறாக பயன்படுத்தியிருக்கவில்லை. | |
| (இ) | விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த மழைக்கோட் மற்றும் தலை ரோஜ் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு கேள்விகள் கோரப்பட்டிருக்காததுடன் கித்துள் செயற்திட்டத்தில் இல்லாத விவசாயிகளிற்கு குறித்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டிருந்தது என்பதற்கான எழுத்து மூலமான சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. | கேள்வி கோரலில் இந்த இரண்டு பொருட்களும் தவிர்க்கப்பட்டதால், அனைத்து கேள்விதாரர்களிடமிருந்தும் தொலைபேசி மூலம் விலைகளைப் பெற்று மதிப்பீட்டின் போது இந்த இரண்டு பொருட்களும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. எனினும், அதன் பின்னர் இது போன்ற அலட்சியத்தைத் தவிர்க்குமாறு ஊக்குவிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | கித்துல் தொழிற்துறையில் ஏற்படும் விபத்துக்களை ஈடுசெய்வதற்கு 500 விவசாயிகளுக்கு ஆயுள் காப்புறுதி வழங்கப்படவுள்ள போதிலும், செயற்திட்டத்தின் உற்பத்தியாளரான லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட் அனைத்து விவசாயிகளுக்கும் காப்புறுதியை வழங்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்குள் 142 விவசாயிகளுக்கு காப்புறுதி மேவுகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது 440 விவசாயிகள் காப்புறுதி மூலம் மேவுகை செய்யப்படுகின்றனர். | உடன்படிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | செயற்திட்ட முன்மொழிவில் அனுமதிக்கப்பட்ட ரூபா 1.9 மில்லியன் தொகையான நிர்வாகச் செலவினங்களுக்கு மேலதிகமாக கித்துல் செயற்திட்டத்தின் செலவினங்களாக தயாரிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நிர்வாகச் செலவினங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | 4P தொடர்பாக உண்மையாக ஏற்பட்ட நிர்வாகச் செலவினங்கள் முன்மொழிவில் வார்த்தைகளில் குறிப்பிடப்படாத போதிலும் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டப் பணிகளுக்கு மாத்திரமே பணம் செலவிடப்பட வேண்டும். |
| (ஊ) | செயற்திட்ட தயாரிப்பாளராக செயற்படும் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட் வழங்கவுள்ள பங்களிப்பின் பெறுமதி ரூபா 34.6 மில்லியன் ஆகும். 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த கம்பனி வழங்கிய பங்களிப்பு ரூபா 9 மில்லியனுக்கு அருகில் மாத்திரமே உள்ளது. மேலும், | ஊக்குவிப்பாளருக்கு புத்தகம் பேணுதல், கணக்கீடு மற்றும் கோவை பேணுதல் தொடர்பாக அனைத்து ஆதார ஆவணங்களுடன் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பிரகாரம் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. | அனைத்து நடவடிக்கைகளும் செயற்திட்ட முகாமைத்துவத்தால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தால் அறிக்கையிடப்பட்ட செலவினங்கள் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் நிறுவனத்தில் காணப்படாததால் லங்கா எக்கோ புறடக்ட் கறண்டி லிமிட்டட்டால் சுட்டிக்காட்டப்பட்ட செலவினங்கள் அடிப்படையற்ற தவறான பெறுமதிகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் செயற்திட்டத்திற்கு வழங்க வேண்டிய பங்களிப்பு ஒரு விவசாயிக்கு ரூபா 165,873 ஆக இருந்ததுடன் மொத்தத் தொகை ரூபா 83 மில்லியனாக உள்ளது. செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் பயனாளிகளின் பங்களிப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. கித்துலை உருக்குவதற்கான உள்நாட்டு தொழிற்சாலைகளின் பெறுமதி ரூபா 176,324 ஆக இருந்த போதிலும் ரூபா 150,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 13 மில்லியனால் குறைத்து மதிப்பிடப்பட்டது. | பயனாளியின் பங்களிப்பைக் கணிப்பிடுவதற்கான தனித்த சமன்பாடு, தயாரிப்பு (2.1) சி. இன் அடிப்படையின் கீழ் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்ட பெறுமதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2023 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டம் IFAD ஆல் 2025 யூன் 30 வரை தொடரப்படுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும் போது, இந்த | IFAD நிதிப் பயன்பாட்டின் தற்போதைய முன்னேற்றம் (2023 யூன் 15 வரை) 42 சதவீதமாக உள்ளதுடன் கொவிட் - 19 தொற்றுநோய் மற்றும் FOREX சிக்கல்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தை கடுமையாக பாதித்தன. சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு IFAD நிகழ்ச்சித்திட்ட காலத்தை 2 ஆண்டுகள் நீடித்து 2025 திசெம்பர் 31 வரை நிதியளிப்பு மூடலுக்கு 6 மாதங்களுடன் நீடித்துள்ளது. | செயற்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அதன் இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டம் IFAD கடனுக்கான ஐ.அ.டொலர் 54.4 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் ஐ.அ.டொலர் 21.11 மில்லியன் நிதியை மாத்திரமே பயன்படுத்தியமை அவதானிக்கப்பட்டது. சதவீதமொன்றாக, இது 39 சதவீதமாக இருந்தது. எனவே, மீதமுள்ள இரண்டு வருட காலப்பகுதியை மிகுதி நிதிகளுடன் கருத்தில் கொள்ளும் போது, நிதியின் பயன்பாடு செயற்திறனற்றதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. | SAPP முகாமைத்துவம் வழங்கப்பட்ட காலப்பகுதியினுள் மீதமுள்ள நிதியைப் பயன்படுத்துவதற்கான மூலோபாய திட்டங்களை உருவாக்கியுள்ளது. | |
| (ஆ) | மேலும், SAPP இற்காக இலங்கை அரசாங்கத்தின் இணங்கப்பட்ட மொத்த பங்களிப்பு ஐ.அ.டொலர் 19.30 மில்லியன் ஆகும், மீளாய்வாண்டில் உள்ளவாறான அரசாங்க நிதியின் ஒட்டுமொத்த பயன்பாடு ஐ.அ.டொலர் 5.99 மில்லியன் மாத்திரமேயாகும். மேலும் இது இணங்கப்பட்ட தொகையின் 31 சதவீதத்திற்கு சமமானதாகும். இந்த செயற்திட்டம் 2025 யூன் 30 இல் முடிவடைய இருந்ததுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இணங்கப்பட்ட அரசாங்க நிதியில் மீதமுள்ள 69 சதவீதத்தை பயன்படுத்துவது நிச்சயமற்றதாக உள்ளது. | IFAD கடன் நிதிகளின் பயன்பாடு முடிவடைவதை நோக்கி, SAPP ஆனது அரசாங்க சுழற்சி நிதியில் உள்ள நிதிகளைப் பயன்படுத்தத் தொடங்கியது. தற்போது GOSL முன்னேற்றம் 38 சதவீதமாக உள்ளது. மற்றொரு ரூபா 500 மில்லியன் (ஐ.அ.டொலர் 1.5 மில்லியன்) ஏறத்தாழ இந்த மாதத்தில் CBSL கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டியுள்ளது. | செயற்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அதன் இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டும். |
| (இ) | IFAD கடன் தொகையைப் பயன்படுத்துவதைக் கருத்தில்கொள்ளும் போது, நிதி உடன்படிக்கைகள் மூலம் ஆலோசனைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கு ஐ.அ.டொலர் 8.63 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், பயன்பாடு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 1.32 மில்லியனாக இருந்தது. சதவீதமொன்றாக இது 15 சதவீதத்திற்கு சமமாக இருந்தது. 2023 ஏப்ரல் 17 இல் உள்ளவாறு மானிய வகைக்கு | அனைத்து சுற்றுச்சூழல் காரணிகளும் இயல்பானதாக இருக்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் 2020 முதல் நாடு கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அசாதாரணமானதாக இருந்தது. அதேநேரம், தற்போதைய அரசாங்க ஆணைக்கு இணங்க உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மக்காச்சோள விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதைகளை வழங்குவதற்கான புதிய முன்மொழிவு அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டது. IFAD | செயற்திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசனை ஒதுக்கீட்டில் இருந்து ஐ.அ.டொலர் 5 மில்லியன் தொகை மாற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனவே, நிதி அமைச்சின் செலவினங்களின் மதிப்பீடு IFAD உடன் உடன்படிக்கையை கைச்சாத்திடும் கட்டத்தில் உகந்ததாக எதிர்வுகூறப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது. | முன்மொழிவை மதிப்பாய்வு செய்து, அந்த முன்மொழிவை உள்ளடக்கிய வகைகளுக்கு இடையே ஒதுக்கீட்டை மீளாய்வு செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனவே, புதிதாக முன்மொழியப்பட்ட மக்காச்சோள செயற்திட்டம் முக்கியமாக விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதை விநியோகத்திற்காக SAPP நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் IFAD செயற்திட்ட காலத்தை 2 ஆண்டுகள் நீடிப்பதற்கு இணங்கியிருந்தது. புதிய செயற்திட்டம் மற்றும் 2 ஆண்டுகள் நீடிப்பு அடிப்படையில், திருத்தப்பட்ட நிதி எதிர்வுகூறல் தயாரிக்கப்பட்டு IFAD அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் AWPB 2023 உம் திருத்தப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டில், செயற்திட்டம் ரூபா 1,264 மில்லியன் மீள்நிரப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டுக் கடனுக்கான ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 789 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, மொத்த ஒதுக்கீட்டில் 38 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 475 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இறக்குமதி தடை மற்றும் வழங்குநர்கள் எதிர்கொள்ளும் அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக விவசாயிகளுக்கு உபகரணங்களின் பெறுகை மற்றும் விநியோக செயன்முறை தாமதமாகியிருந்தது. எனவே, விவசாயிகளுக்கான மானியங்களிற்கான ஏற்பாடு சேமிப்பாகவே இருந்தது. | செயற்திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 350 பயனாளிகளை இலக்காகக் கொண்ட இலவங்கப்பட்டை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 151 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் ஏற்பட்ட உண்மையான செலவினம் ரூபா 40 மில்லியனாக இருந்தது. எனவே, இலவங்கப்பட்டை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 26 சதவீதமாக குறைவாகவே இருந்தது. | உண்மையான செலவினம் (2022.12.31) - ரூபா 39,935,000. விவசாயிகள் சங்கங்களால் தெரிவுசெய்யப்பட்ட 26 சதவீத விவசாயிகள் CBSL இல் மறுசீரமைக்கப்பட்டதால் நிதி முன்னேற்றம் குறைவாக இருந்ததுடன் PFI 142 விவசாயிகளுக்கு மாத்திரமே கடன்களை வழங்கியுள்ளது. விவசாயிகளிடம் இருந்து கடனை அறவிடும் செயன்முறைகளில் வங்கிகள் ஈடுபட்டுள்ளன. 85 விவசாயிகளுக்கு மாத்திரமே மானியங்கள் வழங்கப்படுகின்றன, ஆனால் SAPP கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அடிப்படையில் செயற்திட்டம் தற்காலிகமாக நடாத்தப்பட வேண்டியிருந்தது. | இலவங்கப்பட்டை பயனாளிகளின் வளர்ச்சிக்கு இச்செயற்திட்டம் சரியான திட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பயிற்சி பெற்ற இலவங்கப்பட்டை உற்பத்தியாளர்களால் முறையான உபகரணங்களைப் பயன்படுத்தி சுத்தமான மற்றும் உயர்தர இலவங்கப்பட்டை உற்பத்திப்பொருட்களை சந்தைக்கு வழங்குவது, இலவங்கப்பட்டை உற்பத்தியாளர்களுக்கு புதிய கலாசார நடைமுறைகளைப் பயிற்றுவிப்பது இலவங்கப்பட்டை அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. எனினும் 04 வருடங்கள் கடந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரை இந்த நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் தற்காலிகமாக SAPP கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அடிப்படையில் நடாத்தப்பட வேண்டியிருந்தது. | அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 350 பயனாளிகள் இலக்கிடப்பட்ட போதிலும் உண்மையில் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 85 ஆகும். ஏழு இலவங்கப்பட்டை பதப்படுத்தும் நிலையங்கள் கட்டப்படவிருந்தன, எனினும் இலவங்கப்பட்டை நிலையங்கள் கட்டப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் அமைப்பு இலவங்கப்பட்டை நிலையங்களின் நிர்மாணத்தை பூர்த்தி செய்த பின்னர் SAPP நிலையங்களிற்கு தளபாடமிடப்படும். ஆனால், ஒரே ஒரு நிலையம் மாத்திரமே விவசாயிகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | பாதிக்கப்பட்ட தோல்வியை கண்டறிந்து சரியாக அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | மஞ்சள் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட கிரயம் ரூபா 37 மில்லியனாக இருந்ததுடன் ஏற்பட்ட உண்மையான கிரயம் ரூபா 15.6 மில்லியனாக இருந்தது. மஞ்சள் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் உயர்மட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை அடைந்துகொள்ளுதல், மஞ்சள் விதை உற்பத்தியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மஞ்சள் விதை உற்பத்தி அலகுகளை நிறுவுதல், மஞ்சள் பயிர்ச்செய்கை மூலம் வருடாந்த மொத்த வருமானத்தை அதிகரித்தல் மற்றும் விவசாயி அமைப்பின் திறனை அதிகரிப்பதன் மூலம் சந்தை சார்ந்த சமூக | இந்த செயற்திட்டம் வெற்றிகரமாகச் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளால் இந்த செயற்திட்டம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. | வெளிநாட்டு சந்தையை அடையாளம் காணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனமாக விவசாயி அமைப்பை மாற்றுவதன் இலக்கு ஆகிய செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கயில்லை .இந்த மஞ்சள் பயிரிடும் செயற்திட்டம் தோல்வியடைந்துடன் ரூபா 15.6 மில்லியன் செலவினம் விளைவற்ற செலவினமரியிருந்தது செலவாகிவிட்டது. | | |
| (ஐ) | கவன்டிஷ் வாழைத் தோட்ட செயற்திட்டத்திற்காக, 28 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூபா 15.6 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது, கணக்காய்வு திககியில் வாழைத் தோட்டங்கள் தோல்வியடைந்ததால் கடன் செலுத்தத் தவறியமை அவதானிக்கப்பட்டது. மேலும் கவன்டிஷ் வாழை பயிர்ச்செய்கை செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தமையும், ஏற்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 28 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் ரூபா 15,600,000 கூட்டுமொத்தமான கடன் வழங்கப்பட்டு, வாழைத் தோட்டங்கள் தோல்வியடைந்ததால் கடன் திருப்பிச் செலுத்தப்படவில்லை. ஏற்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமொன்றாக இருந்தது. உள்ளூர் உண்மைகள் இல்லாவிட்டால், கெவென்டிஷ் வாழைப்பழத்திற்கு அவற்றின் வளர்ச்சிக்கும் பழங்களைத் தருவதற்கும் செயற்கை உரம் தேவைப்படுகிறது. இரசாயன உரத்தை தடை செய்வதற்கு அரசு எடுத்த கொள்கை முடிவு காரணமாக அந்த செயற்திட்டம் தோல்வியடைந்து, விவசாயிகளுக்கு விளைச்சலைப் பெற முடியவில்லை. | அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் செயற்திட்டம் திட்டமிட வேண்டும். |

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெலவத்த டயரீஸ் மற்றும் கொலம்பேஜ் டிஸ்ரிபியூட்டர்ஸ் ஆகிய நிறுவனங்கள் மூன்று வருட காலத்திற்கு முறையே பால் அபிவிருத்தி மற்றும் விதை உருளைக்கிழங்குக்காக சிறுநிலவுடமையாளர் வேளாண்மைத்தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்துடன் (SAPP) உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. ஆனால், இந்த கம்பனிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் எந்தப் பங்களிப்பிலும் | • **பெலவத்தை டயரி கம்பனி**<br>SAPP உடன் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்திற்கு ஒரு முகாமையாளரை ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை கம்பனி பூர்த்தி செய்திருக்கவில்லை. எனவே, செயற்திட்டம் சரியாக செயற்பட்டிருக்கவில்லை. SAPP அவர்கள் பணியை பூர்த்திசெய்யத் தவறினால் செயற்திட்டத்தை மூடிவிடும் என்று SAPP ஊக்குவிப்பாளருக்கு அறிவித்தது. பின்னர் ஊக்குவிப்பாளர் செயற்திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு ஒப்புக்கொண்டார். 2023 ஆம் ஆண்டில், அவர்கள் ஒரு முகாமையாளரை நியமித்துள்ளனர், தறபோது நீடிப்பு நடவடிக்கைகள் மற்றும் கள நிறுவனம் | செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டு விரும்பிய முடிவுகளை அடைந்துகொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடவில்லை. மேலும், அந்த நிறுவனங்களின் இணங்கப்பட்ட காலப்பகுதி 2023 யூலை மாதத்தில் முடிவடையும். செயற்திட்டத்தின் முன்னேற்றம் பலவீனமான நிலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | செயற்படுகின்றன. கம்பனி முகாமையாளரின் சம்பளச் செலவை ஏற்றுக்கொள்கிறதுடன் கள நாள் ஏற்பாடு மற்றும் கள விரிவாக்கப் பணிகளுக்கான கிரயத்தையும் ஈடுசெய்கிறது. ஊக்குவிப்பாளரின் இந்த பங்களிப்பு 2023 நிதிக்கூற்றுக்களில் ”கம்பனி பங்களிப்பு” என அறிக்கையிடப்படும்.<br><br>• **விதை உருளைக்கிழங்கு செயற்திட்டம்**<br>IFAD இடமிருந்து தடையில்லா அனுமதி (NOC) பெறப்பட்டதும், கொவிட்-19 நேரத்தில் 4P தரைமட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு 2021 யூலை 22 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. விதை உருளைக்கிழங்கு (சிறிய கிழங்கு) உற்பத்தி மிகவும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப உதவி கொண்டது. மத்திய மாகாணத்தின் மாகாண விவசாய திணைக்களத்தினால் ஆதரவு மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.<br><br>• **கொலம்பகே லங்கா கம்பனி**<br>இந்த கம்பனி விவசாயிகளுக்கு பொருட்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது (உதாரணம், கிருமி நீக்கம் செய்யப்பட்ட மீடியாவுடன் (sterilized media) வளரும் பைகள்) மற்றும் SAPP நேரடியாக விவசாயிகளுக்கு பணம் செலுத்துகிறது. 2023 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்பாளர் பங்களிப்பு எடுக்கப்படும். | |
| (ஆ) | இலவங்கப்பட்டை செயற்திட்டம் - ரூபா 2,434,594 சேவை வழங்குநராக தெரிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பணியை கண்காணிக்காமல் செலுத்தப்பட்டது. மேலும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சேவைகள் என்ன என்பதை கணக்காய்வின் போது அடையாளம் காண முடியவில்லை. அதன் பிரகாரம் செயற்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 39,935,000 தொகை விளைவற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | நிறுவன ரீதியாக வலுப்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக சேவை வழங்குநர் நியமிக்கப்பட்டு, சேவை வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட வேலை நிறைவேற்று அறிக்கைகளை மதிப்பிட்டு உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,999,593.75 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விவசாயிகளுக்கு ரூபா 39,935,000 தொகை கடன்களாகவும் (142 விவசாயிகளுக்கு ரூபா 35,300,000) மற்றும் மானியங்களாகவும் (85 விவசாயிகளுக்கு ரூபா 4,635,000) வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் செய்யும் செயற்பாடுகளை கண்காணித்த பின்னர், VCM, ஊக்குவிப்பாளர் மற்றும் SAPP M&E குழுவின் சான்றுபடுத்தலுடன் | நிதியை சிக்கனமாக பயன்படுத்தி திட்டமிட்ட முறையில் இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களின் தனிப்பட்ட உரிமைகோரல் உவுதிச்சீட்டுக்களில் அவர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் கடன் நிதியை பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர், தற்போது வங்கிகள் கடன்களை அறவிடும் பணியில் ஈடுபட்டுள்ளன. | |
| (இ) | அம்பாறை மாவட்டத்தில் உள்ள அம்பாறை கோனகல விவசாயப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் மாக்கற்றேர்ஸ் கோப்பரேட்டிவ் சொசைட்டி (புறமோட்டர்ஸ்) லிமிட்டட் என்பன 110 பயனாளிகளை இலக்காகக் கொண்டு மஞ்சள் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தை அமுலப்படுத்தியிருந்தன. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 37,331,020 ஆகும். அரசாங்கம் மற்றும் கோப்பரேட்டிவ் சொசைட்டி (புறமோட்டர்ஸ்) ஆகியவற்றிற்கு இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் விவசாயிகளுக்கு ரூபா 11,990,000 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட வேண்டும், ஆனால் ரூபா 8,844,402 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன. இதன் காரணமாக விவசாயிகளுக்கு ரூபா 3,145,598 பெறுமதியான மானிய இழப்பு ஏற்பட்டிருந்தது. | மொத்தமாக கொள்வனவு செய்ததால் இது அரசாங்கத்திற்கு சேமிப்பாகும். | பெறுகைத் திட்டத்தை அமலப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்திற்கும் கூட்டுறவுச் சங்கத்துக்கும் இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் விவசாயி சங்கங்களுக்கு 05 மஞ்சள் சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு ரூபா 2,500,000, களஞ்சியங்களில் பழுதுபார்க்கும் பணிகளுக்கு ரூபா 3,00,000 மற்றும் 01 சூரியசக்தி உலர்த்திக்கு ரூபா 3,000,000 என ரூபா | அப்போது ஒரு இயந்திரம் மாத்திரமே சமுதாயத்தின் தேவையாக இருந்தது. களஞ்சியங்களை (களஞ்சியசாலை) பழுதுபார்க்கும் போது சுகாதாரமான சூழ்நிலையில் அதை மேம்படுத்த வேண்டியிருந்தது. இது உணவு பதப்படுத்தும் நிலையயம் என்பதால் மலசலகூடங்களும் அதே நிலையில் பராமரிக்கப்பட வேண்டும். மலசலகூடங்கள் பாதுகாப்புக்காகவும், சுகாதாரமான நிலைமைகளைப் பேணுவதற்காகவும் பூட்டு மற்றும் | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக நிதிகள் செலவிடப்படக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | 5,800,000 கூட்டுமொத்தம் மதிப்பிடப்பட்டது. ஆனால் 01 மஞ்சள் துப்புரவு இயந்திரங்களுக்காக ரூபா 3,095,569 செலவிடப்பட்டதுடன் மலசலகூட முறைமை மற்றும் மதிப்பீடு மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்படாத ஒரு களஞ்சியசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. களஞ்சியசாலை மற்றும் மலசலகூட முறைமைகளை விவசாயிகள் பயன்படுத்தாமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | சாவியின் கீழ் உள்ளன. | |
| (உ) | கல் ஓயா தோட்ட கம்பனி என்ற கரும்பு செயற்திட்டத்தின் ஊக்குவிப்பாளரால் வழங்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவை 2018 ஏப்ரல் 27 இல் செயற்திட்டத்திற்கு ஏற்ற வகையில் தயாரித்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டதுடன் பெருந்தோட்ட கம்பனி சரியாக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவை சமர்ப்பித்திருக்கவில்லை. முறையாக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவு இல்லாமல், ஊக்குவிப்பாளருடன் (கல் ஓயா பெருந்தோட்ட கம்பனி) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கரும்பு பயிர்ச்செய்கை செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. | சுயாதீன வணிக முன்மொழிவு மதிப்பீட்டுக் குழுவினால் (BPEC) செயற்திட்ட முன்மொழிவு மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், BPEC இன் பரிந்துரையுடன் NSC அங்கீகாரம் மற்றும் IFAD NOC பெறப்பட்டுள்ளன. அந்த அங்கீகாரங்களிற்குப் பின்னர் உடன்படிக்கையுடன் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. | செயற்திட்டங்களுக்கு முறையான உடன்படிக்கைகள் மற்றும் அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். |
| (ஊ) | செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் ரூபா 312,000,000 தொகை 4,000 விவசாயிகளுக்கு இண்டர்கல்டிவேட்டர் (Inter cultivator), தெளிப்பான், பிரஷ் கட்டர் (Brush Cutter) ஆகியவற்றை வழங்குவதற்கு மதிப்பிடப்பட்டது. ஆனால் மேற்கூறிய 03 | முன்மொழிவின் பிரகாரம் 4,000 விவசாயிகளுக்கு இண்டர்கல்டிவேட்டர், தெளிப்பான், பிரஷ் கட்டர் ஆகியவற்றிற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 312,000,000 ஆகும். மேற்கூறிய 03 இயந்திரங்களுக்குப் பதிலாக பல்செயற்பாட்டு இயந்திரதை கொள்வனவு செய்வதற்கு செலவிட்டது ரூபா 138,000,000 ஆகும்; மதிப்பிடப்பட்ட கிரயத்தில் இருந்து வேறுபாடு ரூபா 174,000,000 ஆகும். | பெறுகை நடவடிக்கைகளை திட்டமிடும் போது, தேவைப்பாட்டிற்கிணங்க இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்களுக்குப் பதிலாக, பல்செயற்பாட்டு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு ரூபா 138,000,000 செலவிடப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் இருந்து ரூபா 174,000,000 முரண் காணப்பட்டது. தெளிப்பான் இயந்திரம் மூலம் செய்யக்கூடிய பணிகளை மேற்கூறிய பல்செயற்பாட்டு இயந்திரத்தால் செய்ய முடியாதமையும் அவதானிக்கப்பட்டது. | பல்செயற்பாட்டு இயந்திரம் தெளிப்பான் இயந்திரத்தின் பணிகளைச் செய்ய முடியாது.<br>இன்டர்கல்டிவேட்டர் - மண்கட்டிகளை உடைத்தல், உழுதல் மற்றும் மண்ணை அள்ளுதல்<br>பிரஷ் கட்டர்- கரும்பு புதரை சுத்தம் செய்து அறுவடை செய்தல்<br>தெளிப்பான் - களைகளைக் கட்டுப்படுத்த இரசாயனங்களை தெளித்தல்<br>எனினும் பல்செயற்பாட்டு இயந்திரம் இரசாயனங்களை தெளிப்பதற்குப் பதிலாக இயந்திர களை கட்டுப்பாடு உட்பட பின்வரும் மூன்று பணிகளைச் செய்ய முடியும். | |
| (எ) | இச்செயற்திட்டத்தின் பயனாளிகளாக உள்ள விவசாயிகள், விவசாயிகள் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள போதிலும், பயனாளிகள் விவசாய சங்கத்தின் உறுப்பினர்கள் அல்ல, ஆனால் முறைசாரா குழுவாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | அனைத்து விவசாயிகளும் 4P உடன்படிக்கையின் பட்டியல் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய சங்கங்களில் ஒன்றில் உறுப்பினர்களாக உள்ளனர். | திட்டமிடல் கட்டத்தில் பயனாளிகள் அடையாளம் காணப்பட வேண்டும். |
| (ஏ) | 4,027 பல்நோக்கு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக கல்ஓயா பெருந்தோட்ட கம்பனிக்கு ரூபா 138,931,500 வழங்கப்பட்டிருந்த போதிலும், பெருந்தோட்ட கம்பனி 3,528 இயந்திரங்களையே கொள்வனவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | அனைத்து 4000 விவசாயிகளுக்கும் பல்நோக்கு இயந்திரங்கள் பெறப்பட்டு, விவசாயிகளின் கணக்கிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கும் போது உரிய தகவல்களை சரியாக ஆவணப்படுத்த வேண்டும். |
| (ஐ) | செயற்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளை கல்ஓயா பெருந்தோட்ட கம்பனி (ஊக்குவிப்பாளர்) சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் கரும்பு பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் 4,000 பயனாளிகள் பற்றிய தகவல்களை செயற்திட்டம் பேணியிருக்கவில்லை. | அனைத்து ஊக்குவிப்பாளர்களையும் குறிப்பிட்ட கால இடைவெளியில் முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | SAPP ஆனது 2018 ஒக்தோபர் 30 இல் பால்வள அபிவிருத்திக்காக செல்லோ டயரி புறடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் ஐந்து வருட 4P செயற்திட்டத்தில் நுழைந்துள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த இணங்கப்பட்ட தனியார் துறை பங்களிப்பு ரூபா 11,807,578 ஆகும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பங்களிப்பு ரூபா 67,384,143 ஆகப் பதிவு செய்யப்பட்டு SAAP ஆல் கணக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம், இந்த செயற்திட்டத்திற்கான ஊக்குவிப்பாளர் கம்பனியின் இணங்கப்பட்ட பெறுமதி ரூபா 55,576,565 ஆல் விஞ்சப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையான மதிப்பீடு செய்யாமல் SAPP இற்கு குறித்த தொகை அறிக்கையிடப்பட்டுள்ளது. | பதிவுசெய்யப்பட்ட தொகைக்கு உதவுவதற்கு சரியான நியாயத்துடன் மதிப்பீட்டைச் சமர்ப்பிக்குமாறு ஏற்கனவே ஊக்குவிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளது. | செயற்திட்டம் ஊக்குவிப்பாளர்களுக்கு வழிகாட்ட வேண்டும். |

**3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைந்த அக்ரோ பிசினஸ் கம்பனி லிமிடெட்டின் பின்புற கோழி வளர்ப்பு, CEETEE பால்வள அபிவிருத்தி மற்றும் கௌப்பி செயற்திட்டங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் பயனாளிகளின் உண்மையான எண்ணிக்கைக்கும் நிதிக்கூற்றிற்கான குறிப்பு இல. 07 இன் கீழ் உள்ள மானியத்தை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கைக்கும் இடையே முரண்பாடு கண்டறியப்பட்டது. எனவே, SAPP வழங்கிய மானிய முன்னேற்ற அறிக்கை பயனாளிகளின் எண்ணிக்கை பற்றிய நம்பகமான தகவலை வழங்கியிருக்கவில்லை. | SAPP உடன் ஈடுபட்டுள்ள பயனாளி விவசாயிகள் வயலில் வெவ்வேறு நிலைகளில் உள்ளனர். பயனாளிகள் கடன் நிதி அல்லது தங்கள் சொந்த நிதியில் செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குகின்றனர். நிர்மாணங்கள் அல்லது உபகரண விநியோகம் போன்ற மானியங்களின் கீழ் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்தவுடன், உரிமைக்கோரல் உறுதிச்சீட்டுக்கள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன. எனவே, பௌதீக ரீதியாக ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை, மானியம் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கையிலிருந்து எப்போதும் வேறுபடும். | பயனாளிகளை சரியாகக் கண்டறிந்து, சரியாக அறிக்கையிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தாசினி நீரிழப்பு நிலையம் (முருங்கை பயிர்ச்செய்கை செயற்திட்டம்), உத்சயா இலவங்கப்பட்டை விவசாயிகள் (இலவங்கப்பட்டை பயிர்ச்செய்கை செயற்திட்டம்) மற்றும் பண்டாரவளை பால் உற்பத்தியாளர்களின் (பால்வள அபிவிருத்தி செயற்திட்டம்) செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 17,485,000 தொகை சிறுநிலவுடமையாளர் வேளாண்மைத் தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தால் ((SAPP)) இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் பயனற்ற செலவினங்களாக அவதானிக்கப்பட்டிருந்தன. | மூன்று செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும், கடன்கள் மற்றும் மானியங்களுடன் SAPP ஆல் நேரடியாக வசதி செய்யப்பட்ட இந்த மூன்று செயற்திட்டங்களின் பயனாளிகள் இன்னும் ஏனைய SAPP ஊக்குவிப்பாளர்களுடன் ஈடுபட்டுள்ளனர். தனிப்பட்ட விவசாயிகள் தொழிலை தொடர்கின்றனர். | நிதியை செயற்திறனாகவும் முறையாகவும் செலவிட வேண்டும். |